"மிட்டாக்காடுகள், ரிசர்வ் காடுகள், அமானி என்று மூன்று விதமாக பிரிக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் அல்லாத காடுகளுக்குப் பக்கத்திலேயே ரிசர்வ் காடுகள் இருக்கின்றன. ரிசர்வ் அல்லாத காடுகளிலிருந்து ஏதாவது சிறு பொருள்கள் கொண்டுவந்தாலும், அங்குள்ள கர்ணம், முன்சீபு போன்றவர்களால் அவர்களுக்கு வரி விதிக்கப்படுகின்றது. இதெல்லாம் அங்குள்ள மிட்டாதார்களின் தூண்டுதலின்பேரில் சில இடங்களில் நடைபெறுகின்றன. தழை எடுத்தால் வரி கொடுத்தாகவேண்டும்; விறகு கொண்டு வந்தால் அதற்கும் வரி கொடுத்தாகவேண்டும். இம்மாதிரி ஏழைகள் எது கொண்டு வந்தாலும் அவர்களுக்கு வரி விதித்து அவர்களைப் பல தொந்தரவுகளுக்கு ஆளாக்கி வருகிறார்கள். ஆகவே இதையெல்லாம் கனம் மந்திரி அவர்கள் கவனித்து, இம்மாதிரியான தொந்தரவுகளை அவர்களுக்கு அளிக்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

"மிட்டாக்காடுகளுக்கும், ரிசர்வ் செய்யப்படாத காடுகளுக்கும் இடையேயுள்ள தகராறுகளைத் தீர்த்து வைத்தால்தான் அங்குள்ள மக்கள் வாழ முடியும். இல்லாவிட்டால் அதனால் இரட்டிப்புத் தொந்தரவுகள்தான் ஏற்படும். மிட்டாக்காடுகளிலே, மாடுகள் மேயவும், செம்மறியாடுகள் மேயவும், எரு தழை எடுக்கவும் வழி செய்யவேண்டும். அதுதான் சாதாரண மக்களுடைய பெருங்கவலையாகும். மேலும், அங்கு நிறைய புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களிலெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு முந்தி எங்கு வேண்டுமானாலும் ஏழை விவசாயிகள் பயிர் செய்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். அவ்வாறு பல விவசாயிகள் கஷ்டப்பட்டு பயிர் செய்திருக்கிறார்கள். இப்பொழுது இதையெல்லாம் விட்டுவிட்டு, வெளியே போகவேண்டும், இல்லாவிட்டால் வரி கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இவ்வாறெல்லாம் இப்பொழுது இருதரப்பாருக்கும் மனக்கசப்பு இருந்து வருகிறது. அவர்கள் அநியாயமாக 100 கொடு, 50 கொடு என்று தண்டம் விதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த மாதிரியாக ரிசர்வ் காட்டில் சாதாரணமாக 3,000 மரங்களுக்கு மேலேயே வெட்டிக் கொடுத்துவிட்டார்கள். இந்த மாதிரி தொந்தரவு வராமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பென்னாகரம் பிராந்தியத்தில் காட்டைக் கூப்புகளாக பிரித்து ஏலம் விட்டிருக்கிறார்கள். ஏலம் எடுத்தவர்கள் மரங்களை எவ்வாறு வெட்டுகிறார்கள் என்றால் கூப்பில் இருக்கக்கூடிய சகல மரங்களையும் வெட்டி நாசப்படுத்துகிறார்கள். இவ்விதமான மரங்களைத்தான் வெட்டவேண்டுமென்கிற ரூல்ஸ் எதுவும் இல்லைபோல் இருக்கிறது. இவர்கள் தங்களால் வெட்ட முடியாமற் போனால், மற்றவர்களைக் கூப்பிட்டு வண்டி வண்டியாக வெட்டிப் போட உத்தரவு கொடுக்கிறார்கள். தாங்கள் ஏலம் எடுத்துள்ள கூப்பில்தான் வெட்டவேண்டுமென்பது, இவர்களுக்குக் கிடையாது. பக்கத்திலுள்ள சர்க்கார் காடுகளில் போய் நல்ல மரங்களை எல்லாம் வெட்டி விடுகிறார்கள். இதற்கு அங்கு இருக்கும் லஞ்ச ஊழல்தான் ஏதுவாக இருக்கிறது. பெரிய மனிதர்கள் என்று சொல்லப்படும் சிலர் காட்டிலாகா அதிகாரிகளுடன் சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு, காட்டிலுள்ள பொருள்கள் அனைத்தையும் கள்ளத்தனமாகவும் திருட்டுத்தனமாகவும் எடுத்துக்கொண்டு போகிறார்கள். இதனால் காடே அழிந்து நாசமாகிறது. எக்காலத்திலும், இம்மாதிரி ஊரிலுள்ள பெரிய மனிதர்கள், அல்லது தரகர்கள், சாதாரண பாஷையில் "நாட்டு வக்கீல்கள்" என்று சொல்லப்படு

[Sri S. Kandaswamy Gounder] [8th March 1955

பவர்களால்தான், இந்த நாடே கெட்டு வருகிறது. கடன் கொடுத்தவனுக்கும், கடன் வாங்கியவனுக்குமிடையே தகராறுகள் இவர்களால்தான் உண்டாகிறது. கடன் வாங்கினவனிடம் போய், கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்று சட்டம் இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் கடன் கொடுத்தவனிடம் சென்று கடன் வாங்கினவனுக்கு ஏராளமாக விளைந்து இருக்கிறது என்றும் உடனே தாவாபோடு என்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் இந்த நாட்டு வக்கீல்களை அடக்கிவிட்டால்தான் நாடு க்ஷேமம் அடையும். எல்லா ஊழல்களுக்கும் இவர்கள்தான் காரணம். நாட்டுப்புறத்தாரையும், நகரத்தாரையும் இவர்கள்தான் கூட்டுசேர்த்து ஏழைகளை இம்சிக்கிறார்கள்.

"காட்டுப்புறத்தின் ஓரத்திலுள்ள நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்து ஆதரிக்கவேண்டும். மண்ணேரிக்கு அடுத்து திகலூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கு இருபது வருஷ காலமாக 100 ஏகர் நிலத்தைப் பயிர் செய்து வருகிறார்கள். அக்கிராமத்தின் கணக்கப்பிள்ளை இதுவரை சுமார் ரூ. 500 வாங்கி சாப்பிட்டு இருக்கிறார். இன்னமும் 'நீங்கள் மந்திரியிடம் போனாலும் ஒன்றும் நடக்காது. எனக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத்தான் வேண்டும்' என்று சொல்லுகிறார்."

**DEPUTY SPEAKER** :—"கனம் மெம்பரவர்களின் நேரம் தீர்ந்துவிட்டது."

* **Sri K. T. RAJU** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இக்காட்டிலாகா மானியத்தின் பேரில், கனம் மெம்பர் ஸ்ரீ கோபாலன் உண்ணி அவர்கள், பல முக்கியமான விஷயங்களை சபையின் கவனத்திற்குக்கொண்டு வந்து இருக்கிறார்.

"இன்றைய தினம் இயற்கை அன்னை நமக்கு அளித்திருக்கும் செல்வங்களில் காடும் ஒன்று. எனவே, காடுகளை வளர்க்கவேண்டும், அவைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்கிற நல்லெண்ணம் சமீப காலத்தில் சர்க்காரிடை ஏற்பட்டதை நான் உண்மையில் வரவேற்கிறேன். ஆனால், காடுகளின் முன்னேற்றமும், வளர்ச்சியும் இன்னும் கொஞ்சம் வேகமாக இருக்கவேண்டும். காடுகள் நல்ல முறையில், திட்டவட்டமாக முன்னேறுவதற்கு சில யோசனைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

"நம்முடைய ராஜ்யத்திலுள்ள காடுகளில் உற்பத்தி ஆகும் மரங்கள், தற்பொழுது கண்டிராக்ட் மூலமாக விடப்படுகிறது. பத்து மரங்கள்தான் வெட்டவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தாலும், அதற்கு அதிகமாகவே கண்டிராக்டர்கள் வெட்டிக்கொண்டு போவதாக பல அங்கத்தினர்கள் புகார் செய்தார்கள். இப்புகார்களுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கப்படலாம். இன்னமும் இச்சபை முன் வேண்டிய அளவிற்கு ஆதாரம் கொண்டு வரக்கூடிய நிலையில் நான் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அது எப்படி இருப்பினும், ஆதாரம் இல்லை என்ற காரணத்திற்காக இப்புகார்களை அலக்ஷியப்படுத்திவிடக்கூடாது என்பதை கனம் அமைச்சர்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

"காடுகளைப்பார்த்தால் அவைகள் புத்தம் புதிதாகவே தோன்றுகின்றன. காரணம் என்னவென்றால், அனுமதிக்கப்பட்ட மரங்களுக்கு மேல் வெட்டப்படுகின்றன. இவ்விஷயம் காட்டின் அருகில் இருப்பவர்களுக்கு மட்டில் தெரியும். இம்மாதிரி, இயற்கை அன்னை கொடுத்திருக்கும் இச்செல்வமானது துர்விநியோகிக்கப்பட்டு ஒரு சிலருடைய லாபத்திற்காகவே உபயோகப்பட்டு வருகிறது. இதைத் தடுப்பதற்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. சில யோசனைகளையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"இன்றைய தினம், நமது சென்னை ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான தச்சர்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கிறார்கள். காடுகளிலுள்ள மரங்களை பக்கத்திலுள்ளவர்கள் கொண்டு வந்து சேர்த்துப் பெரிய பாக்டரிகளை ஆரம்பிக்கலாம். சென்னை ராஜ்ய சர்க்காருக்குள்ள தேவைகளையும் மற்ற

8th March 1955] [Sri K. T. Raju]

ஜில்லாக்களிலுள்ள ஆபீசுகளின் தேவைகளையும், இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகட்டும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் தேவைகளையும் கணக்கிட்டு, சர்க்கார் மூன்று அல்லது நான்கு டிம்பர் பாக்டரிகளை ஏற்படுத்தலாம். இதன் மூலம், இப்பொழுது சிதறிக் கிடக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தச்சர்களுக்கு வேலை கொடுக்கமுடியும். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு மரம் குறைந்த விலையில் சப்ளை செய்யவும் முடியும்.

"இம்மாதிரி பாக்டரிகள் ஆரம்பிப்பதால், சர்க்காருக்கு ஆயிரக்கணக்கில் வருமானம் கிடைப்பதுடன், ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு வேலை கொடுத்தவர்களாகவும் ஆவார்கள். காடுகளில் உள்ள மரங்களை வெட்டி, 10 அல்லது 15 மைல் தூரத்திலுள்ள இடங்களில் பெரிய டிப்போக்களை அமைக்கலாம். கூட்டுறவு முறையில் வீடு கட்டும் ஸ்தாபனங்களுக்கும் மரம் குறைந்த விலையில் சப்ளை செய்யமுடியும்; நம் நாடும் முன்னேற்றம் அடையமுடியும். இம்மாதிரி பாக்டரிகளை ஏற்படுத்துவதில் சர்க்காருக்கு அதிக கஷ்டம் இருக்காது என்பதை சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"நம் நாட்டில் தீக்குச்சித் தொழில் சிறு முதலாளிகள் நடத்திவரும் ஒரு முக்கியமான தொழில். இதற்கு வேண்டிய மூலப் பொருள் காடுகளிலிருந்துதான் கிடைக்கவேண்டும். அநேகமாக அந்தமான் தீவிலிருந்துதான் இப்பொருள் இறக்குமதி ஆகிறது என்றும், சென்னை ராஜ்ய சர்க்கார் தீக்குச்சி மரத்தை நமது காடுகளில் வளர்க்க முயற்சி செய்துகொண்டு வருவதாகவும் இந்த டிபார்ட்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ரிப்போர்ட்டிலே கூறப்படுகிறது. இப்படி உற்பத்தி செய்யப்படும் மரங்கள் சிறிய முதலாளிகளுக்குத்தான் கொடுக்கப்படவேண்டும். ஒரே லாட்டாக கண்டிராக்ட் விடக் கூடாது. அவ்வாறு விட்டால் Wimco போன்ற பெரிய முதலாளிகளுக்குத்தான் அனுகூலமாகும். தீக்குச்சித் தொழில் ஒரு குடிசைத் தொழில் ஆனதால், இச் சிறு முதலாளிகள் Wimco போன்ற பெரிய கம்பெனிகளுடன் போட்டி போடமுடியாது. இம்மரங்களைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து சிறிய பாக்டரிக்காரர்களுக்கு கண்டிராக்ட்டாக கொடுத்தால்தான் அவர்களுக்குத் தேவையான மரங்கள் கிடைக்கும். இம்மாதிரியான வசதிகள் செய்துகொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

"விம்கோ போன்ற பெரிய கம்பெனிகளுக்குத்தான் அதிகப்படியாக காண்ட்ராக்ட் கொடுக்கப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். அது எந்த அளவில் உண்மை என்று என்னால் சொல்லமுடியாது. அதற்கு உத்தரவாதமும் என்னால் கொடுக்கமுடியாது. நம்முடைய ராஜ்யத்தில் குறைந்த அளவில்தான் தீக்குச்சி மரங்கள் இருக்கின்றன. இன்னும் அதிகப்படியாக உற்பத்தி செய்ய திட்டம் போட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. குறைந்த அளவில் நம் ராஜ்யத்தில் தீக்குச்சி மரங்கள் உற்பத்தியாவதால் அவைகளை விநியோகம் செய்வதில் முதல் சலுகையை சிறிய முதலாளிகளுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்ற யோசனையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விம்கோ போன்ற பெரிய முதலாளிகள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துகொள்ளும்படி நாம் விட்டு விடலாம். இந்த முறையில் அரசாங்கம் அதற்கு கவனம் செலுத்தவேண்டும். 10-41 a.m.

"காடுகளில் மூங்கில் அதிகமாக உற்பத்தியாகிறது. மூங்கிலை சாதாரணமாக ஏழை எளிய மக்கள்தான் தங்களுடைய வீடுகளை கட்டிக் கொள்வதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அதனால் சர்க்கார் டிப்போக்களை அமைத்து காட்டிலுள்ள மூங்கில்களை அவர்களே வெட்டிக்கொண்டு வந்து குறைந்த விலைக்கு ஏழை எளிய ஜனங்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் அவர்களால் குறைந்த செலவில் வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். எங்கெங்கு மூங்கில் உற்பத்தியாகிறதோ அங்கெல்லாம் சர்க்கார் டிப்போக்களை ஏற்படுத்தி மக்களுக்கு விநியோகம் செய்ய முன்வரவேண்டும். அப்படி இல்லாமல் காண்ட்ராக்டுக்கு விட்டால் குறைந்த விலைக்கு வியாபாரிகள் வாங்கி அதையே அதிகப்படியான விலைக்கு விற்க ஏதுவாகும். இந்தக் காரியங்களைச் செய்தால் சர்க்காருக்கு பெரிய

[Sri K. T. Raju] [8th March 1955

நஷ்டம் வந்துவிடாது, நிதி இல்லை என்று சொல்வதற்கும் இடம் ஏற்படாது. இதில் சர்க்கார் மனம் வைத்து மக்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்பொழுது காட்டிலாகாவில் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு அந்த மூங்கில்களை வெட்டிக்கொண்டு வந்து டிப்போக்களில் வைத்து ஏழை மக்களுக்கும் மத்திய தர மக்களுக்கும் குறைந்த விலைக்கு விற்கமுடியும். இது ஒரு நல்ல யோசனை. இதை முக்கியமாக சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நீலகிரி காடுகளில் அதிகப்படியாக சந்தன மரங்கள் இருக்கின்றன. இரவில் லாரிகளை வைத்துக்கொண்டு அவைகளை வெட்டி அப்புறப்படுத்துகிறார்கள். லாரிகளுக்கு பெரிய லைட்டுகளைப் போட்டுக்கொண்டு வெட்டிக்கொண்டு போவதாக தெரியவருகிறது. எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் கூட திருட்டுத்தனமாக வெட்டிக்கொண்டு போவதாக தெரிகிறது. இப்படி திருட்டுத்தனமாக போகாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். காடுகளிலிருந்து கிடைக்கிற செல்வத்தை இந்த நாட்டு மக்களுக்கு உபயோகப்படக்கூடிய அளவில் பாதுகாக்கவேண்டும். காட்டு இலாகாவிலிருந்து கொள்ளையடிப்பதை நாம் அனுமதிக்கக்கூடாது என்பதை சொல்லிக்கொண்டு இந்த அளவில் என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI V. K. RAMASWAMY MUDALIAR :—" Mr. Deputy Speaker, Sir, in supporting the Demand and opposing the cut motion, I would like to say a few words on the forest policy. The policy of the Government of India and the policy of this State Government is to have at least a third of the area under their jurisdiction under forests. But we are not having even one-sixth of the total area under forests. I need not tell hon. Members that forest is a most important source of wealth and if we do not concentrate our attention on forest development, we cannot increase our national wealth. Recently some experts from Western countries and the experts of our country discussed the forest policy at Dehra Dun. I am sure some useful formula would have been evolved at that conference. I hope our Minister will try to implement the recommendations made there and improve our forest wealth in all directions.

" The policy of our Government has been not to assign for cultivation purposes except assignment for temporary periods for kumri cultivation, lands needed for afforestation. But we have seen instances in Madurai and Salem where the ryots refused to vacate the lands given to them for kumri cultivation after the expiry of the lease period. As a result, a lot of trouble arose and the Forest Department had been helpless in the matter. After the lease period is over, the occupants should be summarily evicted. Otherwise we cannot improve our forest wealth. There are large extents of waste land available in our State for assignment. The Government are even now assigning such lands, and I am sure many more landless people will get such lands after the contemplated land reforms come into effect.

" In the Nilgiris, Kodaikanal and other hills, there is a large extent of arable lands on which the Forest Department could raise teak, wattle bark, lac, bluegum, etc. Though the Forest Department has been paying attention to the raising of these plantations,

8th March 1955] [Sri V. K. Ramaswamy Mudaliar]

I submit that still greater attention should be paid and the area under these plantations should be further extended even though there may be objections to it. Wattle bark is very important and it is used on a large scale for tanning, for paper-making and for rayon industry in our State. I need not emphasise the importance of teak. Increasing teak production will go a long way in augmenting the revenues of our State. It is said that even in Nilambur Forests, whose teak is world-famous, there is scope for extending the area under teak plantation. Lac also is very important because it will earn dollars. Gramaphone plates and even electrical goods are manufactured from lac. So we should concentrate our attention on production of lac and improve lac industry.

"Forests are being denuded of bluegum trees and there has been illicit cutting. Complete failure of the monsoon for the last so many years is attributed to denudation of forests. Bluegum is used as firewood and also for rayon and paper industries.

"We must also pay great attention to the development of game sanctuary. I have seen the very good work done by the Department for the preservation of game sanctuary in Mudumalai Forests and other areas. Indiscriminate shooting of wild animals should be prohibited and strict measures should be taken to punish the offenders.

"Private forests, which have not been maintained properly, should be acquired by the Government under the Madras Preservation of Private Forests Act and more stringent rules should be made to punish those who violate the forest rules.

"I agree with my hon. Friend Sri K. Parthasarathy in his plea that some of the minor forests should be re-transferred to the control of forest panchayats. In my own district of Chingleput, some of these small forests were better managed when they were under the control of the forest panchayats. I request the Hon. Minister to re-transfer at least some of the minor forests to the control of forest panchayats.

"Some Members criticized the Vanamahotsava. But they themselves admitted that at least some percentage of the trees planted during the Vanamahotsava has survived. Vanamahotsava has done something very useful and we should continue to celebrate the festival. Our State will become self-sufficient in firewood and forest produce only if the people co-operate with the Government in the planting and preservation of trees.

"Though the Timber Transit Rules have been in force for a very long time, they have not been enforced in the Chingleput and South Arcot districts. In South Arcot, Chingleput and other places, most of the ryots bring the timber outside the limits and eke out their livelihood. Now, after the introduction of these rules, many ryots are put to much hardship with the result that there has been much of persecution by the forest officials. Permits 10-50 a.m.

[Sri V. K. Ramaswamy Mudaliar] [8th March 1955

are being sold and transferred from one hand to another and there seems to be no end to it. Recently, some of us have made representations to the Hon. Minister and I hope that he will pay his personal attention to this matter and see that so far as these two districts are concerned, these Timber Transit Rules are not enforced.

"So far as the roads in forest areas are concerned, they must be maintained properly. Otherwise, it is not possible for the department to have effective control. With these words, I resume my seat."

* SRI M. MANICKASUNDARAM :—" மன்ற உதவித்தலைவர் அவர்களே, காடு வளர்க்கும்போது கால்நடை அபிவிருத்தியையும் நாம் கவனிக்கவேண்டும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் காலத்தில் வருமானம் வரக்கூடிய சவுக்கு மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. பத்து வருஷங்களுக்கு முன்பு ஆர். சி. டிவிஷன் மேற்பார்வையில் இருந்த காலத்தில் கொடுக்காப்புள்ளி போன்ற பல மரங்களை வளர்த்து வந்தார்கள். அதனால் பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகள் மேய்வதற்கு அனுகூலமாக இருந்தது. காட்டிலாகாவை அபிவிருத்தி செய்வது என்ற நோக்கத்திலும் முக்கியமாக வருமானம் வரவேண்டும் என்பதற்காகவும் சவுக்கு உற்பத்தி செய்தால் வருமானம் வருகிறது என்பதைக் காண்பிப்பதற்கு சவுக்கு மரங்களை உற்பத்தி செய்கிறார்கள். சவுக்கை வளர்ப்பதற்கு முதலிடம் கொடுத்து அதை பாதுகாத்து, ஐந்தாறு வருஷங்களான பிறகு வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதர மரங்களாகிய கொடுக்காபுள்ளி, கருவேல மரம் போன்றவைகளை அபிவிருத்தி செய்தால் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேய்வதற்கு உபயோகமாக இருக்கும். மரங்கள் அபிவிருத்தி அடைவதையும் கால்நடைகள் அபிவிருத்தி அடைவதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் எதில் அதிக பலன் அடையலாம் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டால் சவுக்கைவிட கொடுக்காப்புள்ளி, கருவேல மரம் போன்ற மரங்களை அதிகமாக உற்பத்திச் செய்வதில்தான் அதிகமாக பலனடையலாம். பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் வரவு செலவைத் தான் கணக்கில் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதை விட நாட்டின் க்ஷேமத்தைத்தான் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். விவசாயிகள் அபிவிருத்தி அடையவேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்கவேண்டும். விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் கால்நடை அபிவிருத்தி அடையவேண்டும். கால்நடைகள் அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால் அவைகளுக்கு மேய்ச்சல் பூமி இருக்கவேண்டும். இதனை கருத்தில் கொண்டு காடுகளை வளர்க்கவேண்டும்.

" காவேரி படுகைகள் இருக்கும் இடங்களில் சாதாரணமாக கிராமங்கள் பூராவும் நஞ்சை நிலங்களாகவேதான் இருக்கமுடியும். அங்கே கால்நடைகள் மேய்வதற்கு இடமே இருக்காது. இருந்தாலும் ஏதாகிலும் புறம்போக்கு நிலங்கள்தான் இருக்கும். அந்த நிலங்களையும் கிராம வாசிகள் சாகுபடி செய்ய முன் வந்திருப்பார்கள். ஆகையினால் அம்மாதிரி காவேரி, அமராவதி போன்ற நதி பிரதேச படுகைகளில் சர்க்கார் முக்கியமாக சவுக்கு மரங்களை வளர்க்காமல் கொடுக்காப்புள்ளி மரங்களை வைத்து வளர்க்கவேண்டும். அங்கங்கே பல இடங்களில் அல்லது பேர் பாதி இடங்களிலாவது குறைந்த பட்சம் மாடுகள் மேய்வதற்கு புல் தரையாக இருக்கவேண்டும். அத்துடன் மரங்களும் வளர்க்கப்படவேண்டும். இதை கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" தவிர காடுகளை பாதுகாப்பதற்கு என்று நியமிக்கப்பட்டிருக்கும் வாட்சர்கள் சாதாரணமாக பத்து அல்லது எட்டு மைலுக்கு ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் அம்மாதிரி 8 அல்லது 10 மைலுக்கு

8th March 1955] [Sri M. Manickasundaram]

ஒரு நபர் நியமித்தால் அவரால் அந்த அளவை பாதுகாக்கமுடியாது. இதை சர்க்கார் கவனிக்கவேண்டும். எந்தெந்த இடங்களில் சாதாரணமாக காடுகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் தனியாக பிரத்யேகமான காவலன் இருந்தால்தான் அந்தக்காட்டை ஒழுங்காக பாதுகாக்கமுடியும். திருட்டுத்தனமாக காடுகளில் மரம் வெட்டி அழிந்து விடுகின்றது என்றால் அதற்குக்காரணம் அங்குள்ள காவலர்கள் கம்மியாக இருப்பதுதான். அத்துடன் அந்த காவலர்களும் அப்படி அப்புறப்படுத்துகிறவர்களுக்கு உடந்தையாக இருப்பார்கள் என்பதையும் சர்க்காருடைய கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

"சாதாரணமாக காவலர்களுடைய சம்பளம் குறைவாக இருப்பதன் காரணமாக திருட்டுத்தனமாக வெட்டிக்கொண்டு போகிறவர்களுடன் உடந்தையாக இருக்கிறார்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு சம்பளக் குறைவுடன் பல இன்னல்களும் இருப்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். அதனால் காடுகளுக்கு சமீபத்திலேயே அவர்கள் குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் அவர்கள் காட்டை ஓரளவு பாதுகாக்கமுடியும். அதனால் காடுகளும் அபிவிருத்தி அடைய முடியும். அதை விட்டு 10 அல்லது 20 மைலுக்கு ஒருவரை நியமிப்பதால் அவர்களால் காடுகளை பாதுகாக்கமுடியாமல் போகிறது. அதனால் மரங்களும் அப்பறப்படுத்தப்படுகின்றன. அந்தந்த பிரதேசங்களுக்கு ஏற்றவாறு மேய்ச்சல் தரை ஒதுக்கி அங்கங்கே காடுகள் வளர்க்கவேண்டும். அப்படி காடுகள் இருக்கும் இடத்தில் பேர் பாதியாவது மாடுகள் மேய்வதற்கு இடம் ஒதுக்கவேண்டும். இம்மாதிரி வளர்த்தால் கால்நடைகள் அபிவிருத்தி அடைவதற்கு வசதியாக இருக்கும்.

"காவேரி ஆற்றின் ஓரங்களில் நாணல்களை வளர்க்கவேண்டும். அப்படி வளர்க்காவிட்டால் பக்கங்களிலுள்ள மரங்களை வெள்ளம் வரும் காலத்தில் அடித்துக்கொண்டு போய்விடும். கரைகளையும் அறுத்துவிடும். கரைகளை அறுத்துக்கொண்டு போய் மரங்களையும் அடித்துக்கொண்டு போய் விடும். பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுகிறது. இம்மாதிரியான விஷயங்களைக் கருத்தில்கொண்டு கனம் மந்திரி அவர்கள் மாடுகள் மேய்வதற்கு முக்கியமாக இடம் ஒதுக்கவேண்டும். வருஷந்தோறும் காடுகளை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்."

* SRI M. NARAYANA KURUP :—"Mr. Deputy Speaker, a sophisticated boy asked an aged man of 84 years why he was planting a young mango plant. The man in his wisdom said that he was enjoying not the fruits of the trees which he had planted. This civilized Government do not seem to follow the example of the old man. Otherwise they could have made more substantial progress in the field of forestry in these areas. I am told that it is penal in Japan for one to cut a tree unless he plants two in its place. I wish that there is some such law in our country and it is strictly enforced. As has been observed by some hon. Member, in a tropical country like ours, we want a third of the area under 'forests'. Planning is necessary for substantial achievements in any field but it is indispensable in the field of forests. It requires not only a Ten-Year Plan but a 25 or 50-Year Plan, because results can be achieved only from a long range policy. Even the sum of Rs. 50 lakhs intended to be used under the Five-Year Plan for the development of forests remains to be spent. It is criminal, Sir, to neglect our forest wealth in this fashion. 11-00 a.m.

"Now, there is a certain amount of conflict between our programme to bring more and more waste lands under cultivation and at the same time our programme to increase our forest wealth.

[Sri M. Narayana Kurup] [8th March 1955

In order to have a clear-cut policy, we must first of all have clear survey of waste lands as well as lands which can be utilized for afforestation. No doubt, science can create controlled climatic conditions for the growth of vegetables and things like that to a limited extent. But in the region of forests, we have to choose such regions wherein Nature has provided facilities for the growth of forests. In this connection, I would like to quote an instance in Malabar which would be a surprising revelation to hon. Members. In Malabar the various forest regions are mostly in the hands of private janmies or landlords. Since 1939, the Government were in possession of an estate called Koothali Estate which has an area of 47,000 acres in extent. Recently when a Member of the Revenue Board went to investigate into this question, he was surprised to find that he had no data and that the whole area was unsurveyed. It is a region which may be very fruitfully utilised for afforestation and actually the Government, in between 1948 and 1950, had such an idea when it was under the control of the Forest Department. Subsequently this estate came again under the control of the Revenue Department. These facts show that the Government have no policy at all. Otherwise, they would have surveyed the whole area and allocated areas for 'afforestation purposes' and areas for cultivation purposes. As a first step, the Government should conduct such a survey and demarcate the different areas so that to-day or to-morrow it can be utilized for that purpose. Instead of leaving things as they are, they should adopt a long-range policy in these matters.

"Sir, it is not settled at the highest level whether Forests have any influence on the rainfall or not. But nonetheless it has been definitely proved that in moulding climatic conditions forests play a very important part. Therefore, it is a very grave matter for our country that the maximum area provided for the forests should be achieved at least in the course of a long period. I have no quarrel with those organising Vanamahotsava celebrations. What I have found is that though during Vanamahotsava celebrations trees are planted in the compounds of Government offices every year, we do not find very much of the trees planted in the previous years. Once a newspaper published that the official news of the casualties of the German Army exceeded the whole of the German population and for publishing that, that newspaper was banned. Similarly, I do not know if all the trees planted during Vanamahotsava celebrations in each district in every year are taken into account there would be sufficient space for all these trees to grow. Sir, we must take up this matter more seriously, apart from having Vanamahotsava celebrations. These forests are also very essential for production of green manure.

"With regard to reserve forests, I wish to refer to one point. There are certain areas in reserve forests which may be useful for cultivation. If we allow such areas for cultivation purposes, such a policy is opposed to the beneficial interests of the forests. Once

8th March 1955] [Sri M. Narayana Kurup]

a man enters a forest and squats himself there, for cultivation purposes, he will always have a tendency to widen the area under cultivation by cutting trees, etc.''

DEPUTY SPEAKER :—'' The hon. Member has got only one minute more.''

* SRI M. NARAYANA KURUP :—'' We have been asking the Government to tone up the administration of the Forest Department. Forest Department is one of the departments where toning up is not only necessary but also indispensable. In our district, we had a Collector who was formerly the Conservator of Forests. He was an efficient officer in the administration of the Forest Department. He wanted to enforce strictly the provisions of the Madras Preservation of Private Forests Act. But what was his fate? His decision was summarily superseded by the Government and to protect his honour, he was compelled or he naturally took leave for a time and went away . . .''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' It is very wrong for the hon. Member to presume that some particular officer was compelled to get out of his charge.''

* SRI M. NARAYANA KURUP :—'' He took leave immediately after the decision of the Government and as the Hon. the Revenue Minister said, ' it was the crow sitting and the fruit falling ' . . .''

THE HON. SRI M. A. MANICKAVELU :—'' The officer concerned applied for leave long before the incident took place.'' 11-10 a.m.

* SRI M. NARAYANA KURUP :—'' Whatever it be, the material point here is not the officer taking leave, but we throw away all our national policies when the protest comes from vested interests. So, any person who takes a contract for a thousand rupees would remove trees worth Rs. 10 thousand or even 10 lakhs. There have been special reports in papers how with the connivance and assistance of officers trees worth lakhs of rupees are cut and removed in the Estate mentioned by me, namely, in the Perambara area. I request the Government to overhaul the machinery, to remove the provisions in the law where it is found defective and to enforce strictly the salutary provisions of the existing law.''

DEPUTY SPEAKER :—'' Sri Madhavan Nambiar will now speak. The hon. Member should finish his speech within five minutes.''

* SRI K. MADHAVAN NAMBIAR :—'' മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സാർ, ഏററവും അധികം വരവുള്ളതും ഏററവും ചെലവു കുറഞ്ഞതുമായ ഒരു ഡിപ്പാർട്ട്മെൻറാണ് ഫോറസ്റ്റ് ഡിപ്പാർട്ട്മെൻറ്. പക്ഷെ ഒന്നു പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. മലയാളത്തിൽ ഒരു ചൊല്ലുണ്ട്. ''കാട്ടിലെ മരം, തേവരുടെ ആന, വലിയെടാ വലി'' എന്ന്. അതുപോലെയാണ് വനസംരക്ഷണത്തെ സംബന്ധിച്ച് ഇന്നു ഗവർമ്മേണ്ടിൻെറ മനോഭാവം. ഗവർമ്മേണ്ടിൻെറ ആവശ്യങ്ങൾക്ക് പുതിയപുതിയ

[Sri K. Madhavan Nambiar] [8th March 1955

നികുതിയെ മാത്രം ആശ്രയിക്കുന്നതിനു പകരം വനങ്ങളിൽനിന്നുള്ള ആദായം എടുത്തുകൊണ്ടു ഉപയോഗപ്പെടുത്തുന്നില്ല എന്ന് ഞാൻ ചോദിച്ചുകൊള്ളട്ടെ! വനങ്ങളെ ശരിക്കു സംരക്ഷിക്കുന്നതുകൊണ്ടു രണ്ടു തരത്തിലുള്ള മെച്ചമുണ്ട്. ഒന്നു പ്രത്യക്ഷമായിട്ടുള്ളതും മറ്റൊന്നു പരോക്ഷമായിട്ടുള്ളതും. പലതരത്തിലുള്ള വിലപിടിച്ച വനവിഭവങ്ങൾ കിട്ടുന്നു എന്നുള്ളതാണ് പ്രത്യക്ഷമായ ഗുണം. പരോക്ഷമായി വനങ്ങൾ കാലാവസ്ഥയെ നിയന്ത്രിക്കുന്നു. മഴയ്ക്കു കാരണമാകുന്നു. മണ്ണരിച്ചുപോകുന്നതിനെ തടയാനും വനങ്ങൾ ഉപകരിക്കുന്നു. ഇതിനുംപുറമെ വനങ്ങളിലുള്ള ഇലകളും മററും ചീഞ്ഞടിഞ്ഞു വളം ഒലിച്ചുവന്നു കൃഷിക്കുപയുക്തമാകുന്നു. വനങ്ങളിൽനിന്നു എണ്ണമററ വിഭവങ്ങൾ നമുക്കു കിട്ടിക്കൊണ്ടിരിക്കുന്നു. വഴിലവളം കിട്ടുന്നു. പല തരത്തിലുള്ള മരുന്നുകൾ കിട്ടുന്നു. മലബാറിലെ വനങ്ങളിൽ ധാരാളമായുള്ള അമൽപ്പൊരി രക്തസമ്മർദ്ദത്തിനും ഭ്രാന്തിനും വളരെ വിശേഷപ്പെട്ട ഔഷധമാണെന്ന് ഈയിടെ ഒരു ചോദ്യത്തിന്നുത്തരമായി ബഹു: മന്ത്രിതന്നെ പറയുകയുണ്ടായി. തീപ്പെട്ടിവ്യവസായത്തിനാവശ്യമുള്ള വെള്ളമരം ഇവിടെ ആവശ്യത്തിനു മതിയാകാത്തതുകൊണ്ടു ഇന്ന് പുറത്തുനിന്നു ഇറക്കുമതി ചെയ്തുകൊണ്ടിരിക്കയാണ്. ഈ മരം രണ്ടുമൂന്നു കൊല്ലംകൊണ്ടു ധാരാളം വളരുന്നതാണ്. ഇവിടെത്തന്നെ ആവശ്യംപോലെ നട്ടു വാക്കാൻ സാധിക്കും. അതിൽനിന്നു നല്ല ലാഭവും കിട്ടും. കാട്ടിലെ മൃഗങ്ങളെക്കുറിച്ചു പറയുകയാണെങ്കിൽ അതും നല്ലൊരു വരുമാനമാർഗ്ഗമാണ്. ആനകളെ പിടിക്കുന്നതു വളരെ ആദായമുള്ള ഒരേർപ്പാടാണ്. മററു മൃഗങ്ങളേയും വേട്ടയാടി തോല് എടുക്കാവുന്നതാണ്. മുളകൾ, ചൂരലുകൾ തുടങ്ങിയവയിൽനിന്നും നല്ല വരുമാനമുണ്ടാക്കാം.

"വനസംരക്ഷണനിയമം വനങ്ങളെ രക്ഷിക്കാനല്ല നശിപ്പിക്കാനാണ്" ഉപയോഗപ്പെടുത്തിക്കൊണ്ടിരിക്കുന്നതു്. സ്വകാര്യവനങ്ങളെയെല്ലാം ഗവമ്മേണ്ട് ഏറെറടുത്തു ശരിയായി സംരക്ഷിച്ചാൽ നല്ലൊരു വരുമാനം അതിൽനിന്നു ലഭിക്കും. മുതലാളിമാരെ ഇക്കൂംപോലെ മരം മുറിച്ചു കൊള്ളനടത്താൻ അനുവദിക്കുകയും വല്ല സാധുക്കളും പുനം കൊത്തുകയാണെങ്കിൽ അവരുടെ പേരിൽ കേസ്സ് ചാർജ്ജ് ചെയ്തു ഉപദ്രവിക്കുകയും ചെയ്യുന്ന ഒരു നയമാണ് ഗവമ്മേണ്ട് കൈക്കൊണ്ടിരിക്കുന്നതു്. അതുകൊണ്ടു ഇന്നയിന്ന സ്ഥലങ്ങളിൽ ഇത്രയിത്ര ഏക്കർ റിസർവ്വ് ഫോറസ്റ്റാണെന്നും, ഇന്നയിന്ന സ്ഥലങ്ങളിൽ കാട്ടുവകുപ്പിടിപ്പിക്കണമെന്നും ഒരു ക്ലിപ്തമായ അനുപാതത്തിട്ടു ബാക്കിയുള്ള സ്ഥലങ്ങളെല്ലാം കൃഷിക്കായി വിട്ടുകൊടുത്തില്ലെങ്കിൽ ഇന്നുള്ള കാടുകൾപോലും നശിക്കുന്നതാണിടയുള്ളതു്. അങ്ങനെ വ്യക്തമായ ഒരു രീതിമാനം ഗവമ്മേണ്ട് എടുക്കുമെങ്കിൽ ഗവമ്മേണ്ടിനും ജനങ്ങൾക്കും അതുകൊണ്ടു വലിയ ഗുണമുണ്ടാകുമെന്നും ഇന്നു വനങ്ങളിൽ പ്രവർത്തിക്കുന്ന തൊഴിലാളികൾക്കും ഒരു സംരക്ഷണം അതുകൊണ്ടുണ്ടാകുമെന്നും ഓർമ്മപ്പെടുത്തിക്കൊണ്ടു ഇവിടെ അവതരിപ്പിച്ചിരിക്കുന്ന ഖണ്ഡനോപക്ഷേപത്തെ ഞാൻ പിന്താങ്ങിക്കൊള്ളുന്നു."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"Mr. Deputy Speaker, Sir, let me at the outset congratulate the hon. Gentleman, Sri Gopalan Unni on the great speech he made emphasising the importance of the forest wealth for us. Sir, getting himself into the thick of the forest, he naturally got poetic and he dealt with the importance of the forest wealth and the need to preserve that valuable wealth in an impassioned speech. Sir, the hon. Member sitting opposite to me got philosophic when he wanted to emphasise and impress on the Government . . ."

11-15 a.m. SRI S. SWAMIKANNU :—"கனம் மந்திரி அவர்கள் தமிழிலேயே பதில் சொன்னால் நல்லது. தமிழிலேயே சொல்லும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலில் இந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்த கனம் அங்கத்தினர் அவர்கள் பெரிய பிரசங்கமொன்று நிகழ்த்தினார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகின்றேன். காடு எவ்வளவு சிறந்த தொரு செல்வம் என்பதை அவர் வற்புறுத்திப் பேசினார். காடுகளிலே

8th March 1955] [Sri M. Bhaktavatsalam]

தான் கவிகள் உண்டானார்கள். பெரிய தத்துவ ஞானிகள் உண்டானார்கள். ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்களும் காட்டுச் செல்வத்தின் அருமையைப்பற்றி சிந்திக்கும்போது அவர்களே ஒரு கவியாக மாறி ஒரு காவியத்தை நமக்கு அளித்தார்கள்.

"என் எதிரிலே உட்கார்ந்திருக்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் உயர்ந்த ஒரு தத்துவத்தை நமக்கு விளக்கினார்கள். இங்கு பேசிய எல்லா அங்கத்தினர்களும் ஒருவர் நீங்கல் இல்லாமல், காட்டுச் செல்வத்தை வளர்ப்பது பற்றியும், அதைப் பாதுகாப்பதின் அவசியத்தைப்பற்றியும் பேசினார்கள். சில சமயங்களில் எதிர்க்கட்சியினர் அபாண்டமாகக் குறை கூறினால் வருத்தம் வரலாம். அரசியல்வாதிகள் எல்லாவற்றிற்கும் தயாராய்த்தான் இருக்கவேண்டும். என் எதிரே உட்கார்ந்திருக்கும் கனம் அங்கத்தினர் 'ஏதோ vested interest க்கு உடன்பட்டார்கள்' என்று ஆதாரமில்லாத ஒரு குற்றச்சாட்டை சுமத்துவது தவறு.

"பொதுவாக, இந்த விவாதத்திலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. காட்டுச் செல்வத்தை மேன்மேலும் வளர்க்கவேண்டும் என்பதுதான் நான் உறுதியாக அனுசரித்து வருகின்ற கொள்கை. மழை பெய்வதற்கு காடுகள் உபயோகமாக இருக்கின்றன என்பது ஒருபுறமிருக்க, நாம் எல்லோரும் எதிர்பார்க்கின்ற கைத்தொழில் அபிவிருத்திக்கு காட்டுச் செல்வம் மிகவும் பயன்படக்கூடியதாக இருக்கிறது. பலவகைகளிலே காட்டுச் செல்வம் மிகவும் அருமையானது. ஆகவே, இப்பொழுதிருக்கின்ற காடுகளை மேலும் வளர்ப்பதற்கு இந்தப் பிராந்தியங்கள் பயன்படும் என்று சொன்னாலும் நிலமில்லாதவர்களுடைய நிலை மிகவும் அனுதாபத்துடன் அவசரமாக கவனிக்கப்படவேண்டியதுதான். 'எனக்கு நிலம் இல்லை; மரங்களை வெட்டி விவசாயம் செய்ய என்னை அனுமதிக்க வேண்டும்', என்று ஒருவர் கேட்டால், நான் பரிசீலனை செய்வது என்னவென்றால், மேலும் காடுகளை வளர்ப்பதற்கு இவைகள் பயன்படுமா, அப்படிப் பயன்படும் என்று சொன்னால் அந்தக் காடுகளை அழித்து விவசாயத்திற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய உறுதியான கொள்கை. அதற்கு எல்லா அங்கத்தினர்களும் ஆதரவளித்தது எனக்கு மிகுந்த திருப்தி. ஆனால், வெளியேவுள்ளவர்கள் புகார் சொல்வார்கள். அடிக்கடி என்னிடமும் புகார்கள் வருகின்றன. நிலமில்லாதவர்களுக்கு காடுகளை அழித்துக் கொடுத்துவிடுங்கள், காட்டினால் ஒருவித பிரயோஜனமும் இல்லை என்று என்னிடம் வந்து சொல்வதை நான் அனுதாபத்துடன் கவனிப்பதுண்டு. மதுரையிலும், இன்னும் சில இடங்களிலும் 'ரிசர்வ்' காடுகளிலே சேர்ந்திருக்கிற பிராந்தியங்களாக இருந்தாலும் காடு வளர்ப்பதற்குப் பயன்படாது என்று ஏற்படுகிற இடங்களையெல்லாம் நான் அவைகளை விவசாயத்திற்கு நிரந்தரமாக 'அசைன்' செய்வதற்கோ, இருபது ஆண்டுகளுக்காவது 'அசைன்' செய்து பயிர்செய்வதற்கோ அனுமதித்துக்கொண்டு வருகிறேன். ஆனால்; நிலமில்லாதவர்கள் எப்படியிருந்தபோதிலும் தங்களுக்கு விவசாயத்திற்காக கொடுக்கப்படவேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு ஜில்லாவில் நிலமில்லாதவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை என்னை வற்புறுத்திக்கேட்டார்கள். ஒன்றிரண்டு கனம் அங்கத்தினர்களும் கூட சேர்ந்துதான் கேட்டார்கள். 'நான் காட்டிலாகாவைக் கலந்து பரிசீலிக்கின்றேன்' என்று அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர்கள், 'காட்டிலாகாவைக் கேட்டுப் பிரயோஜனமில்லை, நீங்களே செய்யுங்கள்' என்று என்னிடம் சொன்னார்கள். 'நான் எப்படிச் செய்வது ?' என்று அவர்களிடம் சொன்னேன். காட்டிலாகா அதிகாரிகளையும் நான் இதைப் பற்றி கேட்டேன். 'அந்தப் பிராந்தியத்தில் இப்பொழுது விலையுயர்ந்த சந்தன மரங்கள் இருக்கின்றன, எப்படி அவைகளை அழித்துவிட்டு கொடுப்பது' என்று அவர்கள் சொன்னார்கள். அதற்குப்பிறகு என்னிடம் வந்திருந்த நண்பர்களைக் கேட்டதற்கு 'ஆம்' என்று ஒப்புக்கொண்டார்கள். மறுக்கவில்லை.

"ஆகவே, காட்டுச் செல்வத்தை பாதுகாப்பது மட்டுமில்லாமல் மேலும் மேலும் அதை வளர்க்கவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்து எல்லா அங்கத்தினர்களும் இந்த விவாதத்திலே பேசியது, நான் உறுதியாக

[Sri M. Bhaktavatsalam] [8th March 1955

அனுசரிக்கவேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கு பெரிய ஆதரவு கொடுப்பதாக இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

" மற்றதற்கெல்லாம் திட்டங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் காட்டுச் செல்வத்தை வளர்ப்பதற்கு ஒரு திட்டம் இருக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயண குப்ப் அவர்கள் சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களெல்லாம் வருவதற்கு முன்பே காட்டிலாகா சம்பந்தப்பட்ட வரையில் 'Working plan' ஒன்று இருந்து வருகிறது. ஒரு பக்கத்திலே பிராந்தியம் பிராந்தியமாக பரிசீலனை செய்கின்றார்கள். மேலும், காடுகளை regenerate செய்யவேண்டுமா, de-reserve பண்ணிவிடலாமா என்ற விஷயங்களைப்பற்றி பிரத்தியேகமாக கவனிக்க ஒரு 'Development plan' எற்கெனவே இருக்கிறது. இந்த இலாகா ஒன்றில் தான் இம்மாதிரி 'பிளான்' இருக்கிறது.

" இருக்கின்ற காடுகளைப் பாதுகாத்தால் போதும் ; 'மழைபெய்து தானாக காடுகள் வளரவேண்டுமேயொழிய, நாம் வளர்ப்பது என்பது விரயம்', என்று மற்றொரு அங்கத்தினர் சொன்னார். அடியோடு இல்லை யென்று நான் சொல்லவில்லை. மேலும் ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டது போல் தேசீய காட்டுக்கொள்கையிலே நிர்ணயித்திருப்பது என்னவென்றால், நமது நாட்டிலுள்ள நிலப்பரப்பிலே மூன்றிலொரு பங்கு காடாக இருக்க வேணடும். ஆனால், இப்பொழுது இருக்கும் காட்டின் நிலப்பரப்பு ரொம் பவும் குறைவாக இருக்கிறது. 8,000 சதுர மைல் விஸ்தீரணத்தில்தான் நமது ராஜ்யத்தில் காடுகள் இருக்கின்றன. 10,000 சதுர மைல் என்றது ஆந்திர ராஜ்யப் பிரிவினைக்குப்பின் போய்விட்டது. ஆகவே, நமக்குக் காட்டுச் செல்வம் போதவே போதாது. அதை விருத்தி செய்துதான் ஆகவேண்டும். விருத்திசெய்யவும் முடியும். அந்த எண்ணத்துடன்தான் ஜமீன் பிராந்தியத்திலுள்ள காடுகளையும், பஞ்சாயத்து காடுகளையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு இப்பொழுது அதிலே கவனமும் செலுத்தி வருகிறது.

" நான் அனுசரிக்கப் பார்க்கும் கொள்கை என்னவென்றால், காடுகளை விருத்தி செய்யும்போது விவசாயத்திற்கு அத்தியாவசியமான கால்நடை களுக்கு மேய்ச்சல் வசதியைப் பெருக்கவேண்டும் என்பதே. ஆகவே, மேய்ச்சல் வசதியைப் பெருக்குவதையும் கிராமங்களிலேயுள்ள ஜமீன் அல்லது பஞ்சாயத்து காடுகளை வளர்ப்பதையும் ஒன்றோடொன்று இணைத்துச் செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம் ; அதுவேதான் என்னுடைய கொள்கை.

" படுகைகளிலே சவுக்குகளை நடுகிறார்கள் ; இதனால் அதிக வருமானம் வரலாம், ஆனால் மேய்ச்சல் வசதிக்குகந்த சில மரங்களை வைத்து புல் வளர வசதி செய்யக்கூடாதா ? என்று கரூர் தொகுதியைச்சேர்ந்த கனம் அங்கத்தினர் ஸ்ரீ மாணிக்கசுந்தரம் அவர்கள் கேட்டார்கள். அந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் என்னுடைய எண்ணமும்.

" இன்னும் 'Kumri cultivation' என்று நடக்கிறது. அதனுடைய தன்மையை உணராதவர்கள் புகார் சொல்கிறார்கள். காடு களுக்குக் குந்தகம் இல்லாமல் ஏழைகள் விவசாயம் செய்துகொள்ள லாம் என்பதுதான் 'கும்ரி விவசாய முறை'. ஆனால், ஏதோ விவசாயம் செய்கிறோம் என்று சொல்லி வாங்கிக்கொண்டபிறகு, அங்கேயுள்ள மரங்களையெல்லாம் இஷ்டம்போல் வெட்டி, அந்த முறையில் விவசாயம் செய்யவில்லையென்றால் அவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். மேலும் மேலும் காடுகளை வளர்க்கவேண்டும், கும்ரி விவசாய முறையிலும் பல ஏழை விவசாயிகள் பலன் அடையவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

8th March 1955] [Sri M. Bhaktavatsalam]

"இப்பொழுது சிறிய கிராமங்களிலுள்ள காடுகளைப் பொறுத்தமட்டில் அதிகமாக மரங்களை வளர்க்கவேண்டும். கிராம மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்குத்தேவையான சிறிய மரங்கள், கால்நடைகளுக்குத் தேவையான பச்சைத் தழைகள் இவைகளெல்லாம் காடுகளிலிருந்தே கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் திட்டம் போடுகிறோம்.

"கிராமக் காடுகளைப் பொறுத்தமட்டில் 1953–54-ம் வருஷத்தில் விறகுக்குகந்த மரங்கள் (fuel species) 7,978 ஏக்கராக்களில் நடப்பெற்றன. 1954-55-ல் 14,382 ஏக்கராக்களாக அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. 1955-56-ல் 18 ஆயிரம் ஏக்கராவரையில் இப்பொழுது விஸ்தரிக்கப்படுகிறது. ஆகவே, சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்வதில் நியாயம் இல்லை.

"பெரிய ரிசர்வ் காடுகளிலிருந்துதான் அதிகமாக வருமானம் வருகிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ. கே. டி. ராஜு அவர்கள், தீக்குச்சித் தொழிலுக்கு வேண்டிய மரங்களை (Hard wood)ஐ காடுகளில் வளர்க்கவேண்டுமென்றும், சிறு குடிசைத் தொழிலில் ஈடுபடுபவர் களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். பெரிய முதலாதலி களுக்குக் கொடுத்தால் பெரிய தொழில்களுக்குத்தான் பயன்படுகிறதே யொழிய சிறிய குடிசைத் தொழில்களுக்குப் பயன்படவில்லை. எப்படி யும் ஏலத்தில்தான் விடவேண்டும். ஏலத்தில் விடவில்லையென்றால் புகார் ஏற்படும். சிறிய சிறிய யூனிட்டாக ஏலத்திற்கு விட்டு, சிறிய கைத்தொழிலுக்குப் பயன்படவேண்டுமென்பதுதான் நாங்கள் அனுசரித்து வருகின்ற முறை. ப்ளைவுட் இண்டஸ்ட்ரீஸ்-க்கும் இம்மாதிரி soft wood, hard wood மரங்கள் தேவையாக இருக்கின்றன. ப்ளு கம் மரம் யூகலிப்டஸ் தைலம் தயாரிப்பதற்கு உதவுகிறது. ஆவார மரங்கள் (wattle trees) தோல் பதனிடும் தொழிலுக்கு (tanning industry) உபயோகப்படுகிறது. அரசாங்கத்தின் தேவைகளுக்கும், ரயில்வேக்கும் தேவையான மரங்கள் ரிசர்வ் காடுகளில் இருக்கவேண்டும்.

"1954–55-இல் ப்ளு கம் (blue gum) 750 ஏக்கராக்களிலும், ஆவார 11-25 a.m.
மரம் 1,050 ஏக்கராக்களிலும், 'சாப்ட்' மரம் 900 ஏக்கராக்களிலும் புதிதாக வைக்கப்பட்டன. 1955-56-ல் ஆயிரம் ஏக்கராக்களில் ப்ளு கம் மரமும், 1,500 ஏக்கராக்களில் ஆவார மரமும், 1,000 ஏக்கராக் களில் 'சாப்ட்' மரமும் புதிதாக வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது.

"அடுத்தபடியாக, மண் அறிப்புத் தடுப்பு வேலை (soil conservation) காடுகளில் மிகவும் முக்கியமான திட்டமாகும். மேட்டூரைப் பார்த்தாற்போல் சிறிய மலைகள் இருக்கின்றன. அங்கு ஒன்றுமே இல்லாமல் இருந்தது. அங்கெல்லாங்கூட இரண்டாயிரம் ஏக்கராக்களில் செடிகளை வைத்து அந்த நீர்த்தேக்கத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு அவ்வேலை நடை பெற்று வருகிறது. காடுகளிலிருந்து உற்பத்தியாகின்ற மரங்களின் விவரம் பின்வருமாறு :—

| | டன். |
|---|---|
| 'ஹார்ட்' உட் (hard wood) .. .. .. | 35,000 |
| சாப்ட் உட் (soft wood) .. .. .. .. | 5,000 |
| சந்தன மரம் .. .. .. .. .. | 900 |
| விறகுக்கு உபயோகப்படும் மரங்கள் .. .. | 90,000 |

"ஹார்ட் உட் மரம் 53 லட்ச ரூபாய்க்கும், சாப்ட் உட் மரம் 3 லட்ச ரூபாய்க்கும், சந்தன மரம் 24 லட்ச ரூபாய்க்கும், விறகுக்கு உபயோகப் படும் மரங்கள் 14 லட்ச ரூபாய்க்கும் விற்கப்பட்டிருக்கின்றன.

"டேராடூனிலுள்ள Forest Research Institute-ல் ஆவார மரங்களி லிருந்து பல்ப் எடுத்து, காகிதத்தொழில் செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். நம் நாட்டில் இதுவரை இல்லாத newsprint காகிதம் கூட செய்வதற்கு சாத்தியம் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

[Sri M. Bhaktavatsalam] [8th March 1955

இதற்கென pilot plant-ஐ நீலகிரியில் நிறுவுவதற்கு மத்திய சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையிலும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு இதை எவ்வளவுதூரம் விரிவு படுத்தலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

"வரவு செலவைப்பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். 1953-54ல் வரவு 122 லட்ச ரூபாயும், செலவு 76 லட்ச ரூபாயும், மீதம் 46 லட்ச ரூபாயுமாக இருந்தது. ஆனால், 1954-55-ல் வருமானம் 145 லட்ச ரூபாய். செலவு 66 லட்ச ரூபாய்தான். மீதம் 79 லட்சம் ரூபாய். இதுதான் வரவு செலவுக் கணக்கு.

"இம்மாதிரி எந்தெந்த வகைகளில் காடுகளை வளர்க்கலாம், விருத்தி செய்யலாம், எப்படி விஸ்தரிக்கலாம் என்றெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. அங்கத்தினர்கள் பல குறைகளைப் பற்றி சொன்னார்கள். அவைகளையும் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம்.

"அடுத்தபடியாக லஞ்ச ஒழிப்பைப்பற்றி சொன்னார்கள். லஞ்சம் இல்லையென்று நான் சொல்லவில்லை. லஞ்சத்தை அகற்றவேண்டிய அவசியத்தை நான் உணராமல் இல்லை; அந்த விஷயத்தில் கவனம் செலுத்தாமலும் இல்லை. ஆனால், அதை ரொம்ப மிகைப்படுத்தி டிபார்ட்மெண்டை அடியோடு குறைவுபடுத்திச் சொல்வது நாம் எதிர்பார்க்கும் பலனைத்தராது. லஞ்சத்தை ஒழிப்பதற்கு சம்பளத்தை உயர்த்தினால்மட்டும் போதாது. அதிகமாக சம்பளம் வாங்குகிறவர்கள் லஞ்சம் வாங்குவதே இல்லை என்றும் சொல்லிவிடமுடியாது. ஆனால், எல்லாவற்றிற்கும் முக்கியமாக வேண்டியது பொதுமக்களுடைய ஆதரவு. லஞ்சம் கொடுப்பது தவறு என்ற ஒரு விழிப்பு பொதுமக்களிடையே தோன்றவேண்டும். அத்தகைய ஒத்துழைப்பை அரசாங்கம் மிகவும் கோருகின்றது.

"புதுக்கோட்டையைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் சில குறைகளைப் பற்றி சொன்னார்கள். புதுக்கோட்டையில், தான் காட்டிலாகா மந்திரியாக இருந்தபொழுது எவ்வாறெல்லாம் காடுகளை வளர்க்க அவர் முயற்சி செய்தார்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு அனுபவம் உடையவர்களுடைய அனுபவமும் எனக்கு வேண்டும். இன்றைய தினம் இங்கு பேசினார்களேதவிர, குறைகளை என்னிடம் எடுத்துச்சொன்னால் வேண்டியதைச் செய்ய நான் எப்பொழுதும் தயாராயிருக்கிறேன். அவர்களுடைய யோசனைகளையும் ஏற்று பயன்படுத்திக்கொள்ள மந்திரிகள் தயாராய் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு மந்திரியாயிருந்தபோது காடுகள் எப்படி இருந்ததோ தெரியாது. முன்பு காடுகளிலிருந்து திருட்டே அடியோடு இல்லையென்று அவர்கள் சொல்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுதும் அதே புதுக்கோட்டை மக்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, இதற்குவேண்டிய ஆதரவு பொதுமக்களிடமிருந்து வரவேண்டும்.

"இன்னும் பிரைவேட் காடுகளைப்பற்றி சொன்னார்கள். நீலாம்பூர் காடுகளின் உரிமையைப்பற்றி வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்த கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதையும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

"கோயிலகத்திலுள்ள காடுகளை நியாயமான விலைக்கு அரசாங்கத்திற்குக் கொடுக்க அங்குள்ளவர்கள் தயாராயிருக்கிறார்களென்றும், அரசாங்கம் இன்னும் ஏன் 'offer' கொடுக்கவில்லையென்றும் கேட்டார்கள். இந்த வகையில் நம்பிக்கை கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. கனம் அங்கத்தினரின் உதவியைக்கொண்டு நியாயமான விலைக்கு வாங்கலாம் என்றுதான் நினைக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் உதவியும் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம். மலையாளப் பிராந்தியத்தில் உள்ள பிரைவேட் காடுகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துத் தான் ஆகவேண்டும். அது தேசீய சொத்து. அதைத் தனி நபர்களிடம் விடுவது சரியல்ல. இதற்கெல்லாம் உடனே பணம் கொடுக்க கனம் நிதி மந்திரி அவர்கள் எதிர்ப்பார்கள். அதனால், இதில்

8th March 1955] [Sri M. Bhaktavatsalam]

அவர்களுக்கு அனுதாபம் கிடையாது என்று சொல்வதற்கில்லை. பண வசதி இல்லாததால்தான் அவ்வாறு சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால், அங்குள்ளவர்கள் 'பணம் வேண்டாம், பாண்டுகள் (bonds) கொடுத்தால்கூட போதும்', என்று சொல்கிறார்கள். எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கவேண்டும். அவர்கள் கோரும் தொகையை ஒப்புக்கொள்ளமுடியாது. ஆகவேதான் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது.

"இன்னும் காட்டிலுள்ள மிருகங்களைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் சொன்னார்கள். அதுவிஷயத்திலும் கவனம் செலுத்துகின்றோம். அதற்கென தனியாக ஒரு போர்டு ஏற்படுத்தியிருக்கிறோம்.

"வன மகோற்சவத்தினால் ஒன்றுமே பிரயோஜனம் இல்லையென்று வேடிக்கையாகப் பேசலாம். ஆனால், கவனித்துப் பார்த்தால்தான் உண்மை நிலைதெரியவரும். நான் சட்டசபையில் அவ்வப்போது எவ்வளவு மரங்கள் போய்விட்டன, எவ்வளவு மரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கின்றேன். பரிகாசமாகப் பேசுவதால் பயனில்லை. நல்லமுறையில் இதை நடத்துவதற்கு எல்லோருடைய ஆதரவும் தேவை.

"டிம்பர் டிரான்ஸ்போர்ட் விதிகளை தளர்த்தவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் சொன்னார். சொந்த நிலத்திலிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போகிறவர்கள் ஒரு பெர்மிட் பெறவேண்டும். ஏனென்றால், ரிசர்வ் காடுகளிலிருந்து மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லலாம். அதற்காக இந்த நிபந்தனை இருக்கிறது. இதன் அவசியத்தை எல்லோரும் உணரவேண்டும். ஆனால், இது பலருக்கு இம்சையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எந்த விதத்திலே இந்த விதிகளை மாற்றியமைப்பது என்றுதான் நாங்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

"மாடுகள் மேய்ச்சல் விஷயத்தில் ஒரு பிராந்தியத்தில் இத்தனை மாடுகள்தான் மேயலாம் என்று இருக்கிறது. மாடுகளுடன் மனிதர்களும் போகிறார்கள். ஓரளவுக்கு நிபந்தனை இல்லையென்றால் காடுகளைச் சரிவர பாதுகாக்கமுடியாது."

**DEPUTY SPEAKER :—"How much more time will the Hon. Minister take ?"**

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"Just a minute or two more.**

"கூப் கட்டிங் எதற்கு என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதனால் ஓரளவு மரங்களும், காடுகளும் பாதிக்கப்படுகின்றன என்றாலும், காடுகளில் கூப் வெட்டாமல் இருக்கமுடியாது. கூப் எடுப்பதால்தான் காடுகள் அழிந்துவிடுகின்றன என்று சேலம் அங்கத்தினர் கனம் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். மரங்களைப் பாதுகாக்கவேண்டியதுதான். ஆனால் விறகும் வேண்டியிருக்கிறது. அதனால் இவைகளுக்கெல்லாம் ஒரு பிளான் போட்டுக்கொண்டு, பிறகு அதற்கு ஏற்றவாறு செய்ய திட்டமிடவேண்டும். இப்போது நடைமுறையில் செய்யப்படுவதில் தவறுகள் இருக்கலாம். அந்தத் தவறுகளைப் படிப்படியாக போக்கவேண்டுமேயொழிய, அவைகளை மிகைப்படுத்திச் சொல்வதில் பயன் ஒன்றுமில்லை. ஆகவே இவ்வளவு பேராதரவு அளித்த கனம் அங்கத்தினர்கள், இனிமேலும் ஆதரவு அளித்து இந்த காட்டுச் செல்வத்தை மேலும் மேலும் வளர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு தங்களுடைய பரிபூரண ஆதரவைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு இந்த வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்த கனம் அங்கத்தினர் அவர்களும், இதை ஓட்டுக்குவிட மேலும் வற்புறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்." 11-35 a.m.

[8th March 1955

* SRI P. K. GOPALAKRISHNAN :—" The Hon. the Minister has made a very good speech and we welcome the speech he made in Tamil. But we would request him, Sir, to have the speech translated in Malayalam and Kannada and printed and supplied to the Members from the West Coast at some future time."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I shall be glad to invite my Malayalam and Kannada friends who have not been able to follow my Tamil speech to meet me and I am prepared to address them separately, even in this chamber itself, at some convenient time. I shall address them in English."

DEPUTY SPEAKER :—" Does the hon. Member, Mr. K. C. Gopalan Unni, withdraw his cut motion? "

* SRI K. C. GOPALAN UNNI :—" I withdraw my cut motion, Sir."

The cut motion was by leave of the House withdrawn.

DEPUTY SPEAKER :—" I shall now put the Demand to vote. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 67,62,300 under Demand IV—Forest Department.' "

The motion was carried and the grant was made.

(2) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

(3) DEMAND XIX—VETERINARY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rs.* 1,90,11,200 *under Demand XVIII—Agriculture and Fisheries.*' "

* SRI M. NARAYANA KURUP :—" Sir, last time it was pointed out that whenever any Demand was moved by the Hon. the Minister in charge of it, a statement explaining the policy of the Government should be made. The practice was consistently followed and I do not know why it was given up this time."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I did make a speech last time when I moved the Demand explaining the policy of the Government. But several hon. Members complained that I was taking away their time by making an unnecessarily long speech. Apart from that, there is no change in the policy of the Government already enunciated last year. Therefore, I do not choose to take the time of the House. Whatever I have to say, I shall say at the end. If there is any question of policy involved in the discussion, I shall enunciate our policy also with regard to such questions."